## வகுப்பு - 8 - பொருளியல், 1. பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள்

**பயிற்சி வினாக்கள்:**

1. பண்டங்கள் வாங்கும் போது அதற்கான செலுத்துத் தொகையாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய எதையும் பணம் என்று கூறியவர் ______.

   1. இராபர்ட்சன் 2. ஏ.பி.ஜே. அப்துல் கலாம்

   3. ஆடம் ஸ்மித் 4. அமித்யா சென்

2. இந்தியாவின் "ரூபாய்" என்ற சொல் ______ மொழியில் இருந்து பெறப்பட்டது.

   1. தமிழ் 2. தெலுங்கு 3. சமஸ்கிருதம் 4. மலையாளம்

3. கூற்று 1: பணம் என்ற வார்த்தை ரோம் வார்த்தையான " மொனேட்டா ஜூனோ" விலிருந்து பெறப்பட்டது.

   கூற்று 2: இது ரோமின் பெண் கடவுள் மற்றும் ரோம் பேரரசின் குடியரசு பணமாகும்.

   1. கூற்று 1 சரி, 2 தவறு 2. கூற்று 2 சரி, 1 தவறு

   3. கூற்று இரண்டும் தவறு 4. கூற்று இரண்டும் சரி

4. பண்டைய கால வரலாற்றின் தந்தை என அழைக்கப்படுபவர் ______.

   1. இராபர்ட் புரூஸ்ட் 2. ஹெரோடோடஸ்

   3. மிடாஸ் 4. அலெக்சாண்டர்

5. உலோக நாணயத்தை கண்டுபிடித்தவர் ______ எந்த நூற்றாண்டு ______.

   1. இராபர்ட் புரூஸ்ட், 6 2. ஹெரோடோடஸ், 12

   3. லிடியாவின் பேரரசர் மிடாஸ், 8 4. மாவீரர் நெப்போலியன், 8

6. இந்தியாவில் பூரணாஸ், கர்ஷபணம், பனாஸ் போன்ற நாணயங்கள் ______ ஆட்சியில் அச்சடிக்கப்பட்டன.

   1. மகாஜனபதங்கள் 2. அதிஷ்ட கஜங்கள்

   3. முகலாயர்கள் 4. டெல்லி சுல்தானியர்கள்

LIVEWORKSHEETS

7. தங்கம், வெள்ளி, தாமிரம் அல்லது ஈயம் போன்ற நாணயங்களை துளையிட்டு வெளியிட்டவர்கள் _______.

1. சேரர்கள் 2. சோழர்கள் 3. மௌரியர்கள் 4. பாண்டியர்கள்

8. இந்தியாவில் கிரேக்க மரபுப்படி சித்திரங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களை அறிமுகப்படுத்தியவர்கள் _______.

1. மௌரிய அரசர்கள் 2. குஷாண அரசர்கள்

3. சமண அரசர்கள் 4. புத்த வம்சத்தினர்கள்

9. 12வது நூற்றாண்டில் நாணயத்தில் இந்திய அரசர்களின் உருவத்தை நீக்கி இஸ்லாமிய எழுத்துக்களைப் பொறித்தவர்கள் யார்?

1. அரேபியர்கள் 2. மௌரியர்கள்

3. டெல்லி துருக்கி சுல்தான்கள் 4. மெசபடோமியர்கள்

10. 12ஆம் நூற்றாண்டில் தங்கம், வெள்ளி மற்றும் தாமிரத்தால் ஆன நாணயங்களை _______ என்று அழைத்தனர்.

1. டாங்கா 2. ஜிட்டால் 3. ரூபியா 4. ரூபாய்

11. 12ஆம் நூற்றாண்டில் மதிப்பு குறைந்த நாணயங்களை _______ என்று அழைத்தனர்.

1. டாங்கா 2. ஜிட்டால் 3. ரூபியா 4. ரூபாய்

12. முகலாயரின் ஆட்சிக்காலத்தில் ஹுமாயூனை தோற்கடித்தவர் _______.

1. அக்பர் 2. ஔரங்கசீப் 3. பாபர் 4. ஷெர்ஷா சூரி

13. ஷெர்ஷா சூரி வெளியிட்ட வெள்ளி நாணயத்தின் பெயர் _______

1. டாங்கா 2. ஜிட்டால் 3. ரூபியா 4. ரூபாய்

14. ஷெர்ஷா சூரி காலத்தில் பயன்படுத்தப் பட்ட நாணய முறை _______.

அ) 178 கிராம் வெள்ளி நாணயம் ஆ) 187 கிராம் வெள்ளி நாணயம்

LIVEWORKSHEETS

இ) 40 தாமிர துண்டுகள் ஈ) பைசா

1. ஆ தவிர அனைத்தும் 2. அ, இ மட்டும்

3. அ, ஆ, இ மட்டும் 4. அ, ஈ மட்டும்

15. முகலாயர் ஆட்சி காலம் முழுவதும் பயன்பாட்டில் இருந்த நாணயம் ______.

1. வெள்ளி 2. செம்பு 3. ஜிட்டால் 4. டாங்கா

16. ஆங்கிலேயர்களுக்கு முகலாய பண நாணயத்தை பம்பாய் அச்சகத்தில் அச்சடிக்க அனுமதி அளித்த முகலாயப் பேரரசர் ______

1. செர்ஷா சூரி 2. ஹிமாயூன் 3. அக்பர் 4. பாருக் ஷாயர்

17. பொருத்துக.

i. தங்க நாணயங்கள் - a) டின்னி

ii. வெள்ளி நாணயங்கள் - b) கப்ரூன்

iii. செம்பு நாணயங்கள் - c) ஏஞ்ஜேலினா

iv. வெண்கல நாணயங்கள் - d) கரோலினா

1. i - d ii - c iii - b iv - a 2. i - d ii - b iii - c iv - a

3. i - d ii - c iii - a iv - b 4. i - b ii - c iii - a iv - d

18. உப்பு, அரிசி, கோதுமை, பாத்திரங்கள், ஆயுதங்கள் போன்ற பண்டங்களை பொதுவாக பரிமாற்றிக்கொள்வது ______ ஆகும்.

1. பண்டமாற்று முறை 2. காகித மாற்றுமுறை

3. பணம் மாற்றுமுறை 4. நாணயங்கள் மாற்று முறை

19. மனித நாகரிக முன்னேற்றத்தின் அரிய கண்டுபிடிப்பு ______.

1. தங்கம் 2. வெள்ளி 3. பணம் 4. செம்பு

20. கூற்று: காகித பணம் கண்டுபிடிப்பு பணத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய நிலையாக கருதப்பட்டது.

LIVEWORKSHEETS

காரணம்: தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வது சிரமமாகவும், ஆபத்தானதாகவும் உள்ளது.

1. கூற்று சரி, காரணம் தவறு
2. கூற்று தவறு, காரணம் சரி
3. கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை சரியாக விளக்குகிறது
4. கூற்று மற்றும் காரணம் சரி; கூற்றை காரணம் சரியாக விளக்கவில்லை

21. பண மதிப்பிழப்பு செய்வதாக அறிவித்த ஆண்டு ______.

1. 2016 நவம்பர் 8
2. 2017 ஜூலை 1
3. 2016 ஜூலை 1
4. 2017 நவம்பர் 8

22. பண மோசடி நடவடிக்கை தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு ______.

1. 2002
2. 2001
3. 2003
4. 2004

23. பணம் என்ற வார்த்தை ______ மொழியிலிருந்து பெறப்பட்டது.

1. ரோமன்
2. இத்தாலி
3. இலத்தீன்
4. கிரேக்கம்

24. கீழ்க்கண்டவற்றுள் எது பண்டமாற்று முறையின் குறைபாடு அல்ல?

1. இருமுகத் தேவை பொருத்தமின்மை
2. பொதுவான மதிப்பின் அளவுகோல்
3. செல்வத்தைச் சேமிக்க எளிதானது
4. பொருள்களின் பகுபடாமை

25. எந்தப் பொருட்கள் பொதுவாகப் பணமாகப் பயன்படுத்தப்பட்டன?

1. உப்பு
2. அரிசி
3. கோதுமை
4. மேற்கண்ட அனைத்தும்

26. எந்த உலோகங்கள் உலோகப் பணமாகப் பயன்படுத்தப்பட்டன?

1. தங்கம்
2. வெள்ளி
3. தாமிரம்
4. மேற்கண்ட அனைத்தும்

27. எந்த நூற்றாண்டில் லிடியாவில் முதல் உலோக நாணயம் கண்டறியப்பட்டது?

LIVEWORKSHEETS

1. பொ.ஆ.பி.8 2. கி.மு.8 3. பொ.ஆ.மு.6 4. கி.பி.12

28. பொ.ஆ.மு. 6 ஆம் நூற்றாண்டில் கீழ்க்கண்ட எந்த இந்திய நாணயம் மகாஜனபதங்களால் அச்சடிக்கப்படவில்லை?

1. பூரணாஸ் 2. ரூபியா 3. பனாஸ் 4. கர்ஷபணம்

29. காகிதப் பணத்தினை ஒழுங்குபடுத்துவதும் கட்டுப்படுத்துவதும் ஒரு நாட்டின் ________ வங்கியாகும்.

1. மைய வங்கி
2. பாரத ஸ்டேட் வங்கி
3. இந்தியன் வங்கி
4. கூட்டுறவு வங்கி

30. வங்கிக் காசோலை _______ எனவும் அழைக்கப்படுகிறது.

1. கடன் பணம்
2. வங்கிப் பணம்
3. 1 மற்றும் 2
4. எதுவுமில்லை

31. பணமில்லா நடவடிக்கையானது கீழ்க்கண்டவற்றுள் எதன் நோக்கமாகும்?

1. உலோகப் பணம்
2. காகிதப் பணம்
3. பண்டமாற்று முறை
4. நெகிழிப் பணம்

32. விலைகள் வீழ்ச்சி அடைந்து பணத்தின் மதிப்பு உயர்வது _______ ஆகும்.

1. பணவீக்கம் 2. பணவாட்டம் 3. தேவை 4. எதுவுமில்லை

33. தனிநபர் வருமானத்தின் ஒரு பகுதி _______ ஆகும்.

1. முதலீடு 2. சேமிப்பு 3. 1 மற்றும் 2 4. எதுவுமில்லை

34. கீழ்க்கண்டவற்றுள் எது/எவை தவறான கூற்று/கள்?

அ) ரூபியா என்றால் வெள்ளி நாணயம் என்று பொருள்.

ஆ) பண்டமாற்று செயலில் பணத்தின் ஈடுபாடு இல்லாமல் இருப்பது ஒரு தீமையாகும்.

இ) பண்டமாற்று முறை என்பது குறைகள் இல்லாத ஒரு முறையாகும்.

ஈ) பண்டமாற்று முறை என்பது பழங்கால முறையாகும்.

1. ஈ தவிர அனைத்தும்
2. அ மற்றும் ஈ
3. ஆ மற்றும் இ
4. இ மட்டும்

35. கீழ்க்கண்ட குழுவில் பொருந்தாதது எது?

1. நெகிழிப் பணம்
2. உலோகப் பணம்
3. மின்னணு பணம்
4. நிகழ்நிலை வங்கி

LIVEWORKSHEETS